
அளவுக்கு மிஞ்சினால்......
அமுதமும் நஞ்சாகும் !!!

# பரசிற்றாமோல் நஞ்சாதல்
# (PARACETAMOL TOXICITY)



தலைவலி, காய்ச்சல், நாரிநோ, மூட்டுவலி எதுவாக இருப்பினும் பெரியவர் முதல் சிறியவர் வரை தெரிந்த வீட்டு மருத்துவம் பரசிற்றாமோல்.

ஆனால் சிகிச்சைக்கென நிர்ணயிக்கப்பட்ட அளவுகளிலும் அதிகமாகப் பரசிற்றாமோல் பயன்படுத்தும் போது அது உயிராபத்து ஏற்படுத்தும் அளவிற்கு தீங்கு விளைவிக்கின்றது.

ஏனெனில் பரசிற்றாமோலின் சிகிச்சைக்கென நிர்ணயிக்கப்பட்ட அளவுகளிற்கும் அதன் உடலிற்குத் தீங்கு விளைவிற்கும் அளவிற்கும் இடையிலான வித்தியாசம் மிகச் சிறியது.

எனவே பரசிற்றாமோலின் விளைவுகள் பற்றி ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகின்றது.

## பரசிற்றாமோல்

ஒரு வலி நிவாரணி அழற்சி நீக்கி அல்ல.

**இதன் சில விளம்பரப்பெயர்கள்:**

- ✯ பனடோல்
- ✯ கல்போல்
- ✯ பெவ்பனைனல்
- ✯ பரசிற்றோல்
- ✯ பெவ்பரெக்ஸ்
- ✯ ரபிசொல்

# பரசிற்றாமோல் நஞ்சாதலின் விளைவுகள்

பிரதானமானது:-

- சடுதியான உயிராபத்தை ஏற்படுத்தும் ஈரல் செயலிழப்பு (fulminant hepatic failure)
- சிறுநீரக செயலிழப்பு (renal failure)

ஏனையவை:-

- குருதியுறைதல் பிரச்சினைகள்
- குருதியின் அமிலத்தன்மை அதிகரித்தல்
- இதயத்தசை நோய்கள்
- தசைகளில் பாதிப்பு
- றேயி சின்றோம் (Reyes syndrome)
- அஸ்துமா நோயின் தாக்கம் அதிகரித்தல்

பரசிற்றாமோல் நஞ்சாதலின் அறிகுறிகள் 3-4 நாட்களின் பின்னரே வெளித் தெரியும். ஆனால் இந்நிலையில் கணிசமான அளவு ஈரல் மற்றும் சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டிருக்கும்.

## நஞ்சாதலின் அறிகுறிகள்

| | |
|---|---|
| 1-24 மணி நேரத்தில் | சத்தி, களைப்பு, பசியின்மை. |
| 24-48 மணி நேரத்தில் | வலது மேல் வயிற்று நோ, இதயத்துடிப்பு அதிகரிப்பு |
| 3-4 நாட்களில் | ஈரல் செயலிழப்பதற்கான அறிகுறிகள், செங்கண்மாரி, குருதிப்பெருக்கு, சுயநினைவு குறைதல் |
| 4-14 நாட்களில் | பூரண குணமடைதல் முதல் இறப்பு வரை |

## பரசிற்றாமோல் நஞ்சாதலினால் இலகுவில் பாதிப்படையக் கூடியவர்கள்

- சிறுபிள்ளைகள்
- ஏற்கனவே ஈரல் நோயுடையவர்கள்
- மது பாவனையாளர்கள்
- கர்ப்பிணிகள்
- போஷாக்குக் குறைபாடுடையவர்கள்
- உணவு உட்கொள்ளாது இருப்பவர்கள் (Fasting)
- வலிப்பு, கசரோகம், குருதியுறைதலைத் தடுக்கும் மருந்துகள், கருத்தரித்தல் தடை மாத்திரைகள் பயன்படுத்துவோர்.

## பரசிற்றாமோலின் பாதுகாப்பான பயன்பாட்டிற்கு...

- பரசிற்றாமோல் பயன்படுத்தும் போது முக்கியமாக சிறுவர்களிற்குக் கொடுக்கப்படும் போது அவர்களது உடல்நிறை, வயது என்பவற்றிற்கு ஏற்ற அளவுகளில் கொடுக்கவும்.

- திரவ பரசிற்றாமோலை அதன் செறிவிற்கு ஏற்ப சரியான அளவுகளில் கொடுக்கவும்.

- ஒவ்வொரு முறை வாங்கும் போதும் மருந்துப் போத்தலில் உள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்கவும். வாசித்து விளங்க முடியாதவிடத்து மருந்து கொடுப்பவரிடம் அதனைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

- பரசிற்றாமோல் பயன்படுத்தும் போது பரசிற்றாமோலைக் கொண்டிருக்கும் ஏனைய இருமல், காய்ச்சல் மருந்து வகைகளைப் பயன்படுத்துவதனைத் தவிர்த்துக் கொள்ளவும்.

- 48 மணித்தியாலங்களிற்கு அதிகமாகப் பரசிற்றாமோல் பயன்படுத்த வேண்டியிருப்பின் வைத்தியரிடம் செல்லவும்.

- காய்ச்சல் ஏற்படின் அது $\geqslant$**39°C** யிலும் அதிகமாகும் போது / சிறுவர்கள் மிகவும் அவதியுறுவதை அவதானித்தல் / நோவுடன் கூடிய காய்ச்சல் எனின் மட்டுமே பரசிற்றாமோல் பயன்படுத்தவும்.

- காய்ச்சலைக் குறைப்பதற்காக அதிகளவு நீர் பருகுதல், தண்ணீர் ஒத்தடம் கொடுத்தல், ஆடைகளைக் களைதல், மின் விசிறிகள் மூலம் அறை வெப்பநிலையைக் குறைத்தல் ஆகிய மாற்று வழிகளையும் முயற்சிப்பதன் மூலம் பரசிற்றாமோல் பயன் படுத்துவதைத் தவிர்க்கலாம்.

- நிர்ணயிக்கப்பட்ட அளவுகளிலும் அதிகமாக பரசிற் றாமோல் உள்ளெடுக்கப்பட்டதனை உணரும் போது அல்லது அவதானிக்கும் போது தாமதமின்றி உடன் வைத்திய சாலைக்குச் செல்லவும்.

- பெரியவர்களினால் கொடுக்கும் பொருட்களை மட்டுமே உண்ணுவதற்கும் பருகுவதற்கும் குழந்தைகளைப் பழக்கப்படுத்தவும்.

- மருந்துகளை அவற்றிற்கேயுரிய போத்தல்களில் மூடிகளை இறுக்கமாக மூடி சிறுவர்களிற்குத் தெரியாத அவர்களினால் எடுக்கமுடியாத இடத்தில் வைக்கவும்.

- மருந்துகளை அவற்றின் உண்மையான பெயர்களில் குறிப்பிடவும். சிறுவர்களிற்கு மருந்துக்கள் கொடுக்கும் போது அவற்றினை இனிப்புப் பண்டம் எனக் குறிப்பிட வேண்டாம்.

- சிறுவர்கள் பெரியவர்களைப் பின்பற்றும் இயல்புடையவர்கள், எனவே பெரியவர்கள் சிறுவர்களின் முன்னால் மாத்திரைகளை உட்கொள்வதனைத் தவிர்க்கவும்.

- காலாவதியான மற்றும் தேவையற்ற மருந்துகளை தண்ணீரில் கரைத்து அழித்துவிடவும். அவற்றினை வீசி எறியவேண்டாம்.

## பரசிற்றாமோல் சிகிச்சைக்கு என நிர்ணயிக்கப்பட்ட அளவுகள்

| வயது | அளவு | |
|---|---|---|
| <3மாதம் | வைத்தியரின் ஆலோசனைப்படி | |
| 3 மாதம் - 1வருடம் | 60 - 120mg | 4-6 மணித்தியாலத்திற்கு ஒரு தடவை |
| >1 - 5 வருடம் | 120 - 250mg | |
| 6 - 12 வருடம் | 250 - 500mg | |
| >12 வருடம் | 500mg - 1g | |

**சிறுவர்களிற்கு ஒரு கிலோகிராம் உடல்நிறைற்கு 15mg பரசிற்றாமோல் என்ற வீதத்தில் ஒரு நாளிற்கு 4 தடவைற்கு மேற்படாது கொடுக்கப்படுதல் வேண்டும்.**

வெளியீடு:-
சுகாதார கல்விசார் பொருட்கள் தயாரிப்பு அலகு,
சமுதாய மருத்துவத்துறை,
மருத்துவபீடம்.
யாழ் பல்கலைக்கழகம்
2006

அனுசரணை:-
"Kay-Vi-Tee"
65, Stanley Road,
Jaffna.